திருவண்ணாமலை மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்கள் தேர்தலில் வெற்றிபெற்ற உறுப்பினர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர், அதனை தொடர்ந்து, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலுவைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் சட்டப் பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை எம்.பி., இரா.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, எஸ்.அம்பேத்குமார், பெ.சு.தி.சரவணன், ஒ.ஜோதி, பார்வதி சீனுவாசன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், ஏ.தட்சணாமூர்த்தி மற்றும் திட்டக்குழு உறுப்பினர்கள் உடன் உள்ளனர்.

திருவண்ணாமலை மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்கள் தேர்தல்:

போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர்கள் அனைவரும் அமோக வெற்றி

அமைச்சர் எ.வ.வேலுவைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்

திருவண்ணாமலை, ஜூன் 25-

திருவண்ணாமலை மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்கள் தேர்தலில், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி, தி.மு.க. சார்பில் போட்டியிட்ட 10 மாவட்ட ஊராட்சிக்குழு வேட்பாளர்கள், ஒரு நகரமன்ற வேட்பாளர் மற்றும் ஒரு பேரூராட்சி வேட்பாளர் என அனைவரும் வெற்றிப்பெற்றனர். வெற்றிப் பெற்ற அனைவரும் முத்தமிழறிஞர் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து பின்னர், பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலுவைச் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

திருவண்ணாமலை மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சியர் தலைவருமான பா.முருகேஷ் தலைமையில், தேர்தல் அலுவலரும், மாவட்ட வருவாய் அலுவலர் ஆகிய மருத்துவர் பிரியதர்ஷினி, 23.06.2023 வெள்ளிக்கிழமை அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்களில் நடத்தினர்.

இதில் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்களில் 16 பேர், நகரமன்ற உறுப்பினர்கள் 5 பேரும், பேரூராட்சி உறுப்பினர்கள் 5 பேரும் இதில் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்களில் போட்டியிட்ட 16 பேரில், 10 நபர்கள் மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் தலைமை வகிக்கின்ற தி.மு.க. சார்பில் களம் கண்டனர். அதேபோல் நகரமன்ற மற்றும் பேரூராட்சி மன்ற சார்பில் போட்டியிட்ட 5 பேரில் 2நபர்கள் திமுக கூட்டணியை சார்ந்தவர்கள்.

மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் 34 பேர் நான்கு நகராட்சியை உள்ளடக்கிய நகரமன்ற உறுப்பினர்கள் 123பேர், 10 பேரூராட்சிகளை உள்ளடக்கிய 150 பேர் என மொத்தம் 307 பேர் வாக்களித்தனர். இதில் போட்டியிட்ட தி.மு.க.வை சார்ந்த 10 மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்களும் 2 நகரமன்ற மற்றும் பேரூர்மன்ற உறுப்பினர்களும் 100 சதவீத வெற்றியை ஈட்டி அமோக வெற்றி பெற்றனர்.

அதனை தொடர்ந்து அன்று மாலை 4 மணிக்கு வாக்குகள் எண்ணப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்பட்டன அதன்படி, தி.மு.க. மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் அருணாகுமரேசன், ஆராஞ்சி ஆறுமுகம், இல.சரவணன், செந்தில்குமார், செல்வம், ஞானசௌந்தரி மாரிமுத்து, புஷ்பா, மனோகரன், வ.முத்துமாறன், முருகேசன் ஆகிய 10பேரும்,

திருவண்ணாமலை நகரமன்ற உறுப்பினர் மெட்ராஸ் கே.சுப்பிரமணி, களம்பூர் பேரூர்மன்ற உறுப்பினர் அகமது பாஷா ஆகியோர் உட்பட 12 பேரும் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்களாக வெற்றிப் பெற்றதாக அறிவிக்கப்பட்டனர். அதனை தொடர்ந்து, வெற்றிப்பெற்றதற்கான சான்றுகளை தேர்தல் அலுவலரும், மாவட்ட வருவாய் அலுவலர் ஆகிய பிரியதர்ஷினி வழங்கினார்.

24.06.2023 சனிக்கிழமை காலை 9 மணிக்கு மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்கள் தேர்தலில் வெற்றிப்பெற்ற அனைவரும் வேலூர் சாலையில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு, சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அதனை தொடர்ந்து, முகாம் அலுவலகத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலுவைச் சந்தித்து, வெற்றிப்பெற்ற அனைவரும் வாழ்த்து பெற்றனர்.

நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், கழக மருத்துவர் அணி தணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், வடக்கு மாவட்ட அவைத்தலைவர் அ.ராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, எஸ்.அம்பேத்குமார், பெ.சு.தி.சரவணன், ஒ.ஜோதி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பார்வதி சீனுவாசன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.வி.ராஜ்குமார், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர் ப்ரியாவிஜய ரங்கன், மாவட்ட பொருளாளர் ஏ.தட்சணாமூர்த்தி நகர செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன், மற்றும் எம்.ஆர்.கலைமணி, இர.சீனிவாசன் உட்பட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஒன்றிய - மாநில பா.ஜ.க. அரசுகளின் கொடுங்கோன்மையால் மணிப்பூரில் மனிதப் படுகொலைகள்!

கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

இனிகோ இருதயராஜ் தலைமை! ஆ.இராசா எம்.பி. - சா.பீட்டர் அல்போன்ஸ் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 25-

ஒன்றிய மற்றும் மாநில பா.ஜ.க. அரசுகளின் செயலிழந்த நிர்வாகத்தின் காரணமாக மணிப்பூர் மாநிலத்தில் நடக்கும் மனிதபடுகொலைகளை கண்டித்து அனைத்துக் கட்சியினரையும் பல்வேறு மத அமைப்புகளையும் ஒருங்கிணைத்து கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நாளை (26.6.2023-திங்கள் கிழமை) மாலை 4 மணி முதல் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத் தலைவர் இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், சசிகாந்த் செந்தில், ஐ.ஏ.எஸ்., வி.சின்னதுரை எம்.எல்.ஏ., இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி எஸ்.எஸ்.பாலாஜி எம்.எல்.ஏ., ம.தி.மு.க. முதன்மைச் செயலாளர் துரை.வைகோ, மனித நேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., கே.நவாஸ்கனி எம்.பி., டி.வேல்முருகன் எம்.எல்.ஏ., இ.ஆசீர், டாக்டர் அ.நீதிநாதன், முனைவர் ஜே.ஜார்ஜ் ஸ்டீபன், செபாஷ்டின் பொலொனிப்பரம்பில், கே.பி.எடிசன், டாக்டர் ஏ.எம்.சின்னப்பா, எம்.ஜி.பகத்சிங், ஜெபமாலை ராஜா, டாக்டர்.இருதயம், ரேன்சம், ஆண்டனி ஜெராள்டு, எல்.அருள்சீலி உள்பட பலரும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பேசுகின்றனர்.

சிவகங்கை மாவட்ட திட்டக்குழு

உறுப்பினர் தேர்தலில் தி.மு.க.வினர் அமோக வெற்றி!

அ.தி.மு.க. ஆதரவுடன் போட்டியிட்ட அ.ம.மு.க. படுதோல்வி!

சிவகங்கை, ஜூன் 25-

சிவகங்கை மாவட்டத்தில் நேற்று முன்தினம் 12 மாவட்ட திட்டக்குழு உறுப்பினருக் கான தேர்தல் நடைபெற்றது. இதில் ஒன்பது மாவட்டதிட்டக் குழு உறுப்பினர்கள் போட்டியின்றி ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 12 உறுப்பினர்களில் மீதம் உள்ள 3 மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை 11 மணி அளவில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. நகராட்சி பேரூராட்சி சார்பில் மொத்தம் 284 பேர் வாக்காளர்கள்.

இதில் 272 பேர் வாக்களித்தார் கள். தி.மு.க சார்பில் சிவகங்கை நகர்மன்ற உறுப்பினரும் நகர துணை செயலாளருமான வீனஸ் ராமநாதன் தேவகோட்டை நகர்கழக செயலாளர் பெரி.பாலா திருப்புவனம் பேரூராட்சி வார்டு உறுப்பினர் சித்ராதேவி ஆகியோர் திமுக சார்பில் போட்டியிட்டார்கள் .சிவகங்கை நகர் மன்ற உறுப்பினரும், நகர அ.ம.மு.க செயலாளருமான அன்புமணி அ.தி.மு.க.ஆதரவுடன் போட்டியிட்டார். தேர்தலில் 272 வாக்குகள் பதிவானது. 12கவுன்சிலர்கள் வாக்களிக்க வரவில்லை. பிற்பகல் 3 மணிக்கு வாக்குகள் என்னபட்டது. இதில் வீனஸ் ராமநாதன் 226 வாக்குகளும், பெரி. பாலா 221 வாக்குகளும், சித்ராதேவி 211 வாக்குகளும் பெற்று வெற்றி பெற்றார்கள். 4வாக்குகள் செல்லாதவை. இதில் அ.தி.மு.க. ஆதரவுடன் போட்டியிட்ட அ.ம.மு.க. வேட்பாளர் அன்புமணி 66 வாக்குகள் பெற்று படுதோல்வி அடைந்தார். வெற்றி பெற்ற மூன்று தி.மு.க. வேட்பாளர்களுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் ஆர்.சிவராமன் சான்றிதழ்களை வழங்கினார். உதவி தேர்தல் அலுவலர்களாக வீரராகவன் விஷ்ணுப்ரியன் ஆகியோர் நடத்தினார்கள்.

அதை தொடர்ந்து போட்டியின்றி தேர்ந்து எடுக்கப்பட்ட 9 மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்களான மாவட்ட கவுன்சிலர்கள் நாகினி செந்தில்குமார், ஏ.கே.மதிவாணன், ஏடிஎன். ரவி, திருமதி ராதா பாலசுப்ரமணியன், மஞ்சூரி லட்சுமணன், சரஸ்வதி, உட்பட 9 பேர்களுக்கு தேர்தல் அதிகாரி சிவராமன் சான்றிதழ்களை வழங்கினார். வருகிற 28ஆம் தேதி சிவகங்கை மாவட்ட திட்ட குழு முதலாவது கூட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில் காலையில் நடைபெறுகிறது.

வெற்றி பெற்ற மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்கள் வீனஸ் ராமநாதன் பெரி. பாலா சித்ராதேவி ஆகியோருக்கு முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்ட துணை செயலாளர் த.சேங்கை மாறன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே. எஸ். ரவி, நகர்மன்ற தலைவரும் சிவகங்கை நகர செயலாளருமான துரைஆனந்த் முன்னாள் துணை தலைவர் கார்கண்ணன் எம்.எல்.ஏ. மாரியப்பன் கென்னடி மானாமதுரை நகர செயலாளர் க.பொன்னுச் சாமி ஒன்றிய செயலாளர்கள் திருமலை முத்து ராமலிங்கம், கே.ஆர். ஆனந்த், இளைஞரணி அயூப் கான் சேவியர் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் தி.மு.க. நிர்வாகிகள் வாழ்த்து தெரிவித்தார்கள்.

கலைஞர் நூற்றாண்டையொட்டி - அயலக தி.மு.க. சார்பில்

குவைத்தில் மாபெரும் குருதிக் கொடை முகாம்!

புதுக்கோட்டை வீ.அருள் செல்வம் தலைமை! ஒருங்கிணைப்பு - புதுக்கோட்டை பஷீர்

குவைத், ஜூன் 25-

கலைஞர் நூற்றாண்டையொட்டி குவைத்தில் அயலக தி.மு.க. (NRTIA) நடத்திய மாபெரும் குருதிக் கொடை முகாம். 23.6.2023 அன்று குவைத் ஜாப்ரியா இரத்த வங்கியில் நடைபெற்றது.

அயலக தி.மு.க. அவைத் தலைவர் புதுக்கோட்டை வீ. அருள் செல்வம் தலைமையில் செயலாளர் புதுக்கோட்டை பஷீர் ஒருங்கிணைப்பில் விழுப்புரம் ஜஹாங்கிர் வரவேற்பில் நடந்த விழாவில் பொறுப்பாளர் சிதம்பரம் தியாகராஜன், ஆலஞ்சியார், பத்தமடை சிந்தா பக்கீர், சிக்கந்தர், அறிவுமணி, மண்டல அமைப்பாளர்கள் காட்டூர் சொ.ஆறுமுகம், குடந்தை தியாகராஜன், மயிலாடுதுறை ஜியாவு தீன்,சபீக்கான், ஆயிங்குடி சையத் முஸ்தபா, சேகரை செல்லத்துரை, புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா, பத்தமடை கே.என்.கே.நாகூர், கறம்பக்குடி ஜாபர் சாதிக், திருவாரூர் ச.குமார்,செந்தில் முருகன், அப்பாஸ்

மகளிர் அணி துணைச் செயலாளர் மயிலாடுதுறை ராஜலட்சுமி பாபு மற்றும் கழக உடன்பிறப்புகள் பெருமளவில் கலந்து கொண்டு கலைஞரின் நூற்றாண்டைக் கொண்டாடினர்.

தளபதி பேரவை ராஜா முகம்மது,ஜாஹீர் உதயநிதி ஸ்டாலின்நற்பணிமன்றத்தின் ஆலங்குடி கார்த்திக், ஈரோடு முஸ்தபா, திராவிட கழகத்தின் சித்தார்த்தன், விடுதலை சிறுத்தைகள் அன்பரசன், அறிவழகன், மகிழன் செல்லதுரை, ம.தி.மு.க.வின், மணிவாசகம், அசன் முகமது, த.மு.மு.க.வின், பாரூக் மகாஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

காணொலி வாயிலாக நிகழ்வை அயலக தி.மு.க. தலைவர் கலாநிதி வீராசாமி எம்.பி. தொடங்கி வைத்தார். விழாவில் கழக அயலக அணியின் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம். அப்துல்லா சிறப்பு விருந்தினர்களாக இன்பத் தமிழ் இளங்கோவன் முனைவர் மகேந்திரன் கவிஞர் ப.ராமன், சுப்ரீம் கார்கோ நிறுவனர் சித்திக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

குவைத் தமிழ் அமைப்புகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க.

ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞர் அணி பொறுப்புகளுக்கு விண்ணப்பங்கள் வழங்கல்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

தி.மு.க இளைஞர் அணிச் செயலாளர்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இளைஞர் அணி பொறுப்புகளுக்கு விண்ணப்பங்கள் வழங்க வேண்டுகோள் விடுத்துள்ளார். அதன்படி தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் உள்ள 20 ஒன்றிய கழகங்கள், 2 நகர கழகங்கள், 2 பகுதிக் கழகங்கள் மற்றும் 12 பேரூர் கழக அமைப்புகளுக்கான இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப்பப் படிவங்களை மாவட்டக் கழக அலுவலகத்தில் பெற்று முழுமையாக பூர்த்தி செய்து பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒட்டி வழங்க வேண்டும்.

இப்பொறுப்புகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் கழக இளைஞர்கள் 35 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். விண்ணப்பத்துடன் வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, கல்விச் சான்றிதழ் நகல் இணைத்து 30.06.2023 அன்று மாலை 6 மணிக்குள் மாவட்டக் கழக அலுவலகத்தில் வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்
செயலாளர்
தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க.

எல்லீஸ் நகர் முன்னாள் பகுதிச் செயலாளர்

எல்லீஸ் இரா.முருகன் முதலாமாண்டு நினைவு நாள்!

நினைவு கல்வெட்டை கோ.தளபதி எம்.எல்.ஏ. இன்று திறந்து வைக்கிறார்!

மதுரை, ஜூன் 25-

எல்லீஸ் நகர் முன்னாள் பகுதிச் செயலாளர் எல்லீஸ் முருகன் அவர்களின் முதலாமாண்டு நினைவு நாள் இன்று (25.6.2023) கடைப்பிடிக்கப்படுகிறது.

எல்லீஸ் முருகன் கல்லூரி படித்த காலங்களில் இருந்து இந்தி எதிர்ப்பு போன்ற முக்கிய போராட்டங்களில் கலந்து கொண்டு கட்சிக்கு தொண்டாற்றியவர்.

மதுரை மாவட்ட இளைஞரணி பகுதி செயலாளராக இருந்து பின்னர் இளைஞரணி மதுரை மாவட்ட துணை அமைப்பாளராக இருந்தவர். எல்லீஸ் நகர் வட்டச்செயலாளராகவும் அதன் பின்னர் மதுரை மாவட்ட இரண்டாம் பகுதி செயலாளராகவும் இருந்தார்.

நெசவாளர் அணியில் மாவட்ட அமைப்பாளராக இருந்தவர். நெசவாளர் அணியில் இருந்த போது நெசவாளர்களுக்காக கஞ்சித் தொட்டி திறந்து சிறை சென்றவர். 35 வருடங்களாக தொடர்ந்து ஒரே கட்சியான நமது தி.மு.க. கழகத்தில் இருந்து மக்கள் பணி செய்தவர்.

எல்லீஸ் நகரில் கடந்த ஆண்டு 25.06.2022 அன்று பொது மக்கள் சேவையில் இருந்த போது திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் இறந்தார். தன்னுடைய 20 வயதில் 1989ல் கடலூரில் கட்சியில் இணைந்து கட்சி தொண்டாற்றியவர். அதனை தொடர்ந்து மதுரையில் தனது கட்சி பணியை தொடர்ந்தவர் தனது உயிர் மூச்சு நிற்கும் கடைசி நிமிடம் வரை மக்கள் தொண்டும் கட்சிப்பணியும் ஆற்றியவர் இன்று (25.06.2023) அவரது முதலாமாண்டு நினைவு நாளை முன்னிட்டு எல்லீஸ்நகர் கிருதுமால் வாய்க்கால் பாலம் அருகில் கழக நினைவுக்கம்பம் மற்றும் கல்வெட்டு திறக்கும் நிகழ்ச்சி மாவட்டச்செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. நிகழ்த்துகிறார். மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

சிவகங்கையில் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்களாக தி.மு.க.சார்பில் வெற்றிபெற்ற வீனஸ்ராமநாதன், பெரி.பாலா, சித்ரா தேவி ஆகியோரை முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்டத் துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், சிவகங்கை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார், பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர், கே.எஸ்.ரவி, நகரச் செயலாளர்கள் துரைஆனந்த், க.பொன்னுச்சாமி உட்பட நிர்வாகிகள் பலர் வாழ்த்துத் தெரிவித்தார்கள்

மதுரை கிழக்கு தொகுதி சக்கிமங்கலம் அரசு நடுநிலைப்பள்ளியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பொது சுகாதாரத் துறை சார்பாக பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாமை தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ.சங்கீதா, கூடுதல் ஆட்சியர் சரவணன் (வளர்ச்சி), மாவட்ட ஊராட்சித் தலைவர் சூரியகலா கலாநிதி உட்பட பலர் உள்ளனர்.